திருப்பூரின் தென்பகுதியில் பனியன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நன்மையைக் கருதி திருப்பூரில் தற்போதுள்ள இரண்டாவது (E.S.I.) மருந்தகத்தை இரு பகுதிகளாகப் பிரித்து கூடுதலாக மருந்தகம் ஒன்று தென் பகுதியில் நிறுவுவது குறித்து, சுகாதார—குடும்ப நலத்துறை இயக்குநர் ஆலோசித்து வருகிறார். மருந்தகத்திற்காக தனியார் கட்டிடம் ஒன்று வாடகைக்கு அமர்த்தும் முயற்சியும் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே. திருப்பூரின் தென் பகுதியில் பனியன் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் இருக்கும் பகுதியிலே சீக்கிரத்தில் அந்த மருத்துவமனை துவக்கப்படுமா? என்றைக்கு அந்த மருத்துவமனை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, கூடிய விரைவில் திறப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

நெல்லை மாவட்டத்திலுள்ள ஆதீன நிலங்கள்

* 233 வினா—**திரு. என். டென்னிஸ் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருவாடுதுறை ஆதீனம் நிலங்களுக்கு வடக்கு கோடை மேல் தெற்கு கோடை மேல் அழகியன் கால் நதி யுன்னிகால் பாசனத்திற்கு மணிமுத்தார் அபிவிருத்தி தீர்வை வசூலிக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

கீழ்தஞ்சாவூர் வருவாய்த்துறை நிர்வாகம்

* 234 வினா **திரு. எஸ். வடிவேல் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்தஞ்சை போலிஸ் நிர்வாகம் தனியாக பிரிக்கப்பட்டது போல், ரெவின்யூ நிர்வாகத்தையும் தனியாகப் பிரிவினை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.